REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 9உ சனி (24—11—56) ★ ★ வெளியூர் : கார்த்திகை 10உ ஞாயிறு (25—11—56) [இதழ் 143

வடநாட்டில் மேலும் 4 மருத்துவக் கல்லூரிகள்— தென்னாட்டில் இரண்டுதான் அமையுமாம் !

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள ஆறு மருத்துவக் கல்லூரிகளில் ஒன்று ஏற்கனவே புதுவையில் நிறுவப்பட்டு விட்டதாக மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எஞ்சிய ஐந்து கல்லூரிகளில் நான்கு கான்பூர், ராஞ்சி, ஜாம்நகர், போபால் ஆகிய வடநாட்டு நகரங்களில் நிறுவப்படும் என்றும், ஐந்தாவது கல்லூரி கோளத்தில் அமையும் என்றும், மத்திய உதவி சுகாதார மந்திரி திருமதி சந்திரசேகரன் அறிவித்திருக்கிறார்.

இந்திய கம்யூனிஸ்டுகளின் கொள்கைக் குழப்பம்

அஜாய் கோஷ் உறுதி செய்கிறார்

ஹங்கேரிச் சம்பவங்கள் கவலை தருகின்றனவாம்

கடந்த காலத்தில் மார்க்சீய— லெனினிச வழி நடக்கவில்லையாம்

ரஷ்யாவை இனி 'தெய்வ'மாகத் தொழமாட்டார்களாம்

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினர் கொள்கைக் குழப்பத்திற்குப் பெயர்போனவர்கள் என்பதை உறுதி செய்யும் வகையில், ஜெயப்பிரகாஷ் நாராயணனுக்குப் பதிலளிக்கும் வகையில் கம்யூனிஸ்டு கட்சிச் செயலாளர் அஜாய்கோஷ் குறிப்பிட்டுள்ளவை அமைந்துள்ளன.

ஹங்கேரி சம்பவங்கள் கவலை தருகின்றனவாம்!

"ஹங்கேரியில் நிகழ்ந்துள்ள சம்பவங்கள், இந்தியக் கம்யூனிஸ்டுகளை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளன.

'11 ஆண்டுகளாக, 'மக்கள் ஜனநாயக ஆட்சி' நடைபெற்றபிறகு, 'அத்தகு சம்பவங்கள்' நடைபெற்றிருப்பது கண்டு நாங்கள் மிக மிக வருந்துகிறோம்.

மலையத்தனை தவறுகள்

"11 ஆண்டுக்கால 'மக்கள் ஜனநாயக ஆட்சி'யில் மலையத்தனை அளவுள்ள தவறுகள் நிகழ்ந்திருக்கின்றன என்பது, சம்பவங்களின் போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

"ஹங்கேரி சர்க்கார், ரஷ்யாவுடன் கொள்ளவேண்டிய உறவுகளிலும், உள்நாட்டிலும் எண்ணற்ற தவறுகளை —குற்றங்களைப் புரிந்திருக்கிறது என்பதும் தெரிய வந்துள்ளது."

இவ்வாறு கூறியுள்ள அஜாய் கோஷ் மேலும் கூறியுள்ளதாவது :—

"கடந்த காலத்தில், இந்தியக் கம்யூனிஸ்டுகள் எல்லா விவகாரங்களிலும் ரஷ்யாவையே 'வழிகாட்டி'யாக — 'ஆதர்ச புருஷனாக' — 'இலட்சிய நாடாக'க் கருதிக்கொண்டு வந்தனர்; ஆனால், அந்தக் கொள்கையை இப்போது கைவிட்டுவிடுவதாகத் தீர்மானித்துள்ளனர்.

"ரஷ்யா செய்கிற காரியங்கள் அனைத்தும் சரியானவையே என்று கடந்த காலத்தில் நாங்கள் சாதிக்க முயன்று வந்திருக்கிறோம். ரஷ்யாவின் கொள்கையில் ஏதேனும் ஒரு அம்சத்தில் குறைநிறை காணுவோரை எல்லாம் நாங்கள் (அமெரிக்க ஏஜெண்டுகள் என்று) தூற்றி வந்திருக்கிறோம்.

"இந்தப் போக்கையும் மாற்றிக்கொள்ளத் தீர்மானித்துவிட்டோம்.

'மார்க்சீய, லெனினிச வழியிலிருந்து விலகினோம்'

"ஒவ்வொரு நாட்டுடையவும் தெளிவான பாரம்பரியங்களையும் குறிப்பிட்ட சுபாவங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, எல்லா நாடுகளுக்கும் பொதுவான கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட ஒரு இயக்கத்தின் மூலமாக, ஒவ்வொரு நாட்டிலும் சோஷலிசத்தை நிர்மாணிக்க முடியும் என்ற மார்க்சீய, லெனினிச சித்தாந்தத்திலிருந்து இந்தியக் கம்யூனிஸ்டுகளின் கடந்த கால நடவடிக்கைகள் வழி விலகிச் சென்றிருக்கின்றன. எங்கள் நடவடிக்கைகள் மார்க்சீய, லெனினிசக் கோட்பாடுகளுக்கு ஒத்தனவாக இருக்கவில்லை."

★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழக அறிக்கை—10/56

உறுப்பினர் புதுப்பித்தல்

திராவிட முன்னேற்றக் கழகத்தில், சென்ற தடவை உறுப்பினராயிருந்து, இரண்டாவது முறையாக இப்போது புதுப்பித்துக்கொள்ளாதவர்கள், 1956 டிசம்பர் திங்கள் 31-ம் நாளுக்குள் உறுப்பினராகத் தங்களைப் பதிவு செய்து கொள்ளாவிடில், தாமாகவே கழகப் பொறுப்புகளிலிருந்தும் உறுப்பினர் உரிமையிலிருந்தும் நீங்கிக் கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்

'அறிவகம்'
சென்னை-13
24-11-'56.

★★★★★★★★★★★★★★★★★

நாகி கைது செய்யப்பட்டு இரஷ்யாவுக்குக் கடத்தப்பட்டார் ?

புதாபெஸ்ட், நவ. 23—
ஹங்கேரியின் முன்னாள் பிரதமரான இம்ரி நாகியும் அவரது சகாக்களும் இரஷ்ய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இரஷ்யாவுக்குக் கடத்தப்பட்டுவிட்டதாக புதாபெஸ்டிலிருந்து நம்பகமான செய்தி ஒன்று ராய்ட்டருக்குக் கிடைத்திருப்பதாகத் தெரியவருகிறது

மரண தண்டனையை ரத்து செய்யும் மசோதா

புதுடில்லி, நவ. 23—
மரண தண்டனை விதிப்பதை ரத்து செய்யவேண்டும் என்று தனி உறுப்பினர் ஒருவர் கொண்டு வந்த மசோதாவை மக்கள் சபை நிராகரித்துவிட்டது.

இந்தச் சோதனையை நாம் மேற்கொள்வதற்கு இன்னும் தக்க தருணம் வரவில்லையென்றும், 'மிகக் கோரக் கொலைகள் புரிந்தவர்கள் விஷயத்தில்தான் இக்கடுந்தண்டனை அளிக்கப்படுகிறது' என்று நீதிபதிகள் பதிவு செய்துள்ளனரென்றும், மசோதாவை எதிர்த்து மந்திரி படாஸ்கர் பேசுகையில் குறிப்பிட்டார்.

1955—56-ல், இந்தியாவில் மொத்தம் ரூ. 13,09,000 மதிப்புள்ள வைரங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அதற்கு முந்திய வருடத்தில் மொத்தம் ரூ. 10,09,000 மதிப்புள்ள வைரங்கள் இறக்குமதியாயின.

தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் கோரவிபத்து :

நூற்றுக்கணக்கானோர் பலியான பரிதாபம்

எண்ணற்றோருக்குப் படுகாயம்

ஆற்று வெள்ளம் பாலத்தைத் தகர்த்து இரயிலைக் கவிழ்த்த சோகம்

பெட்டிகள் நொறுங்கிய கோரக் காட்சிகள்

சென்னை நவ. 24—
சென்னையிலிருந்து நேற்று முன்னாள் இரவு புறப்பட்ட தூத்துக்குடி 'எக்ஸ்பிரஸ்' இரயில் வண்டி, அரியலூருக்கும் கல்லகம் இரயில் நிலையத்திற்கும் இடையில், நேற்று காலை 5-20 மணியளவில், மருதையாறு பாலத்தில் விபத்துக்குள்ளாகி சுமார் 200 பேரின் உயிரை பறித்துவிட்ட சோகச் செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம்! நெஞ்சம் பதறினோம்!

விபத்தில் உயிரிழந்த அனைவரின் குடும்பத்தாருக்கும் காயம்பட்டவர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கழகத் தோழர்கள் விரைந்தனர்

விபத்து நடந்த இடத்தைச் சுற்றியுள்ள ஊர்களின் தி. மு. கழகத் தோழர்களும், திருச்சி மாவட்ட கழகத் தோழர்களும் மீட்பு வேலைகளிலும், காயம் பட்டோருக்குத் தேவையான உதவிகளிலும் உடன் இருந்து கவனித்துப் பணியாற்றுகின்றனர்.

விபத்து விவரம்

தென்னிந்திய இரயில்வேயிலேயே இதுவரை நிகழ்ந்திராத கோர விபத்து என்று கூறப்படும் இந்த விபத்து 23-11-56ந் தேதி காலை 5-20 மணியளவில், அரியலூர்—கல்லகம் இரயில் நிலையங்களுக்கிடையில் நிகழ்ந்திருக்கிறது.

எஞ்சினும் முதல் ஏழு பெட்டிகளும் பாலத்திலிருந்து தவறி மருதையாற்றில் விழுந்து, எண்ணற்ற உயிர் பலிகளைக் கொண்டிருக்கின்றன.

பாலம், மருதையாறு என்ற காட்டாற்றில் பெரு மழையின் காரணமாகத் தோன்றிய திடீர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு,

பாலத்தின் சிமெண்டு தூண்கள் கரைந்து, வண்டி வந்தபோது பாரம் தாளாமல் நொறுங்கியிருக்கிறது; அதன் விளைவுதான் விபத்து.

கோரக் காட்சிகள்

விபத்தினால் உயிரிழந்து, கை கால் இழந்து அவதிப்பட்டோரின் காட்சிகள் மிகக் கோரமாயிருந்திருக்கின்றன.

ஐந்து மூன்றாம்வகுப்புப் பெட்டிகளும் ஒரு முதல்—இரண்டாம் வகுப்புப் பெட்டியும், ஒரு பார்சல் வண்டியும் ஆற்றில் விழுந்து நொறுங்கியிருக்கின்றன.

எஞ்சின் டிரைவர், மற்றும் இரு 'பயர்மென்'கள் ஆகிய மூவரும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

200 பேர்

200 பேர்வரை உயிரிழந்திருக்கக்கூடும் என்று உயர்தர இர

(1-ம் பக்கம் பார்க்க)

பொதுச்செயலாளர் அனுதாபச் செய்தி

22-11-56-ஆம் நாள் இரவு சென்னையிலிருந்து சென்ற தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் வண்டி அரியலூருக்கு அருகிலுள்ள ஆறு ஒன்றில் கவிழ, அதன் காரணமாக 125 பேருக்குமேல் இறந்துபட்டார்கள் என்றும், நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமுற்றார்கள் என்றும் வந்துள்ள துயரச் செய்தி கேட்டு நான் திடுக்கிட்டுப் போனேன். அந்தச் செய்தி கேட்ட அனைவரையும் மீளாத் துக்கத்தில் ஆழ்த்தும் என்பதில் ஐயமில்லை. உற்றார்-உறவினர்-நண்பர் என்ற முறையில் பலரை இழந்து வருந்தும் அனைவர்க்கும் படுகாயமுற்று அவதிப்படும் அனைவர்க்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி.மு.க.

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

யில்வே அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

கொல்லப்பட்டோரில் 26 பேர் பெண்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

மீட்பு வேலை

விபத்துபற்றி தகவல் கிடைத்ததும், இரயில்வே அதிகாரிகள், உதவி இரயில்வே மந்திரி அளகேசன், மருத்துவ அதிகாரிகள் ஆகியோர் திருச்சி, விழுப்புரம், சென்னை முதலிய இடங்களிலிருந்து விபத்து நிகழ்ந்த இடத்திற்கு விரைந்து மீட்பு வேலையிலும் நிவாரண வேலைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

போலீசார், மற்றும் 'டால்மியாபுரம்' தொழிலாளர்கள் ஆகியோரும் ஸ்தலத்திற்கு விரைந்து அவதிக்கு ஆளானோருக்கு உதவிகள் செய்வதில் ஈடுபட்டிருக்கின்றனர்.

சென்னை சர்க்காரும் நிவாரண வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

காயம்பட்டோர் திருச்சி, அரியலூர் முதலான இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர்.

பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டிருப்பதுடன், இரயில்வே இலாகாவிற்கு மட்டும் சுமார் ரூ. 6 இலட்சம் சேதம் என்று கூறப்பட்டிருக்கிறது.

கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே இருக்கிறது.

குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத், பண்டித நேரு, இரயில்வே மந்திரி சாஸ்திரி ஆகியோர் அனுதாபச் செய்திகள் அனுப்பியுள்ளனர் என்று தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க.வின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 24-11-'56 சனி

ஆத்துக்கு உதவாத அமைச்சு!

தென்னாட்டு மக்களின் அடிப்படை உணவுப் பொருளாக இருப்பது அரிசி. நம் மக்களின் மூல உணவுப் பண்டமான அரிசி தேவையான அளவிலும் மலிவான விலையிலும் கிடைக்கப் பெறாது திண்டாட வேண்டிய வேதனைதரும் நிலைமை, இப்பொழுது நம் மக்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது.

வயிறு நிறைய உண்ணும் அளவிற்கு நம்மக்களில் பெரும்பான்மையினர் இன்று இருக்கவில்லை. வேலையில்லாக் கொடுமைக்கு ஆளாகி, வறுமையில் சிக்கி, வளம் குன்றி, பசித்த வயிறுகளுடனே காலங்கழித்து வர வேண்டிய கட்டாயத்திலும், அரை வயிறு கால் வயிறு மட்டுமே உண்டு உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வாழவேண்டிய நெருக்கடியிலும் நம்மவரில் சரிபகுதி மக்கள் பல்லாண்டுக் காலமாக இருந்து வருகின்றனர்.

அரிசியை வாங்கி உண்ணக் கூடிய வகையில் செல்வ நிலை உடையவர்கள் சிலரேயாவர். அந்தச் சிலருக்கும்கூட போதுமான அளவிற்கும் தங்களுக்குள்ள வாங்கும் சக்திக்கேற்ற விலைக்கும், அரிசி கிடைப்பது என்பது இன்றைய சூழ்நிலையில் அரிதாகிவிட்டது.

உணவுப் பொருளான அரிசி, அவசியமற்ற ஆடம்பரப் பொருள் இனத்தைச் சேர்ந்ததல்ல. மனிதன் உயிர் வாழ்வதற்குரிய முக்கியம் வாய்ந்ததாகும்.

தென்னகம் விவசாயத்தை மட்டுமே ஒரு பெருந் தொழிலாகக் கொண்டும் இருக்கிறது. அத்தொழிலை நம்பி காலந்தள்ளி வருபவர்களே இங்கு ஏராளம். வேறு தொழில்களுக்கு இங்கு வாய்ப்பும் வசதியும் நிரம்ப இருந்தபோதிலும், அதனைப் பயன்படுத்தும் நிலைமை இப்பொழுது இருக்கவில்லை.

அரிசி, மூல உணவுப் பொருள்.

அரிசி, ஆடம்பரப் பண்டம் அல்ல.

அரிசி உற்பத்தியே இங்கு மூலத் தொழில். அரிசியே அடிப்படை உணவுப் பண்டமாக இருந்தபோதிலும், அனைவருக்கும் அரிசி வாங்கி உண்ணக்கூடிய செல்வ நிலை இல்லை.

சிலருக்கே, அரிசியை வாங்கி வயிறார உண்ணக் கூடிய வாங்கும் சக்தி இருந்து வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், அந்தச் சிலருக்கும் அரிசி கிடைப்பது என்பது அரிதாகி இருக்கிறது.

அதாவது, அரிசியை வாங்கி உண்ணக்கூடிய வகையில் பணபலம் படைத்திருப்பவர்களுக்குக்கூட, அவர்கள் வாங்கும் விலைக்கொப்பவும் பழக்கத்திற்கொப்பவும், தாராளமாக அரிசி கிடைக்கச் செய்வது என்பதுகூட, நமது காங்கிரசு ஆளவந்தார்களால் இயலாத ஒன்றாக இருக்கிறது.

மிகச் சாதாரணமான—ஆனால் இன்றியமையாத அரிசியை மக்களுக்குத் தாராளமாகக் கிடைக்கச்செய்வதில் கூட, ஆளவந்தார்களுக்கு அறிவும் ஆற்றலும் அக்கறையும் இருக்கவில்லை.

பசி பசி என்று கலங்கி வாடும் மக்களைக் கண்டு நையாண்டி செய்வதுபோல் பேசிவருகின்றனர் நாடாள வந்த நல்லவர்கள்! அரிசி அரிசி என்று அல்லலுறும் மக்களைப் பார்த்து, 'பொறுமையாக இருங்கள்' என போதனை புரிந்துவருகிறார்கள், பொதுமக்கள் பெயரால் பதவியில் வீற்றிருக்கும் 'பச்சைத் தமிழர்கள்!'

அரிசி கிடைக்கப்பெறாத அவலட்சண நிலையும் விலை ஏறிவரும் வேதனைத்தன்மையும் இன்று நேற்று, எதிர்பாராவகையில் தோன்றியதல்ல. ஏறத்தாழ எழெட்டுத் திங்களாகவே இந்த அவல நிலை மெள்ளமெள்ள வளர்ந்தோங்கிக்கொண்டு வந்திருக்கிறது.

கடந்த ஆறு திங்களுக்கு முன்னால் அமைச்சர்கள் 'நிலைமையை அரசாங்கம் கருத்தூன்றிக் கவனித்து வருகிறது; நிலைமையைக் கட்டுப்படுத்தும் முறைகளை ஆராய்ந்தும் வருகிறது' என்று ஆறுதல் கூறத் தொடங்கினர். பதினைந்து தினங்களுக்கு முன்னர்கூட விவசாய மந்திரி, ஆறு திங்களுக்குமுன் கூறிய ஆறுதல் மொழியை, சென்னை அரசாங்கச்சார்பில் மீண்டும் ஒருமுறை ஒப்பித்தார்.

அதுவுமன்றி, 'தேவைக்குரிய அரிசி வழங்குவதைத் தொடர்ந்து செய்து வருவதற்காக இந்தியப் பேரரசிடம் தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது' என்றும் அரசாங்கச் சார்பில் அமைச்சர்கள் அறிவித்தனர்.

நெருக்கடி முற்றிவிடவே, நியாயவிலைக் கடைகளைத் திறப்பது என்ற முடிவிற்குவந்து, மாகாணம் முழுவதிலும் 1,600 நியாயவிலைக் கடைகளை திறந்திருப்பதாக அரசாங்கம் அறிவித்தது. அக்கடைகளில் சென்னை நகரில் மட்டும் 240 கடைகள் திறந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு நியாயவிலைக் கடைகளைத் திறப்பதின்மூலம் சந்தையில் விற்கப்பட்டுவரும் அரிசியின் விலையைக் கணிசமாகக் குறைத்துவிட முடியும் என்ற அரசாங்க நம்பிக்கை ஈடேறவில்லை. அரசாங்கமெதிர் பார்த்தபடி விலை இறங்குவதற்குப்பதிலாக மேலும் ஏறவே தொடங்கியது.

நியாய விலைக் கடைகளிலிருந்து மக்கள் அனைவரும் தேவையான அளவிற்கு அரிசியை வாங்குவது என்பது முடியவில்லை, அதாவது, மக்களுக்குத் தேவைப்படும் அளவிற்கு நியாய விலைக் கடைகளுக்கு அரிசியைத் தர அரசாங்கத்தால் இயலவில்லை. அதன் பலனாக நியாய விலைக் கடைகளைத் திறப்பதின்மூலம் எதிர்பார்த்த பலன் கிட்ட முடியாது ஏமாற்றம் ஏற்பட்டுவிட்டது.

நியாய விலைக் கடைகள் அரசாங்க நோக்கத்தில் தோல்வி கண்டுவிட்டன. இத்தோல்வியின் எதிரொலியாக வெளிச் சந்தையில் கிடைக்கக்கூடிய அரிசியின் விலையும் முன்பிருந்ததைவிட கூடத் தொடங்கியது.

இந்த நிலையில் குறுவை நெல் சாகுபடியும், நியாய விலைக் கடை திறப்பும் ஒன்று சேருவதால், அரிசியின் விலை குறைந்துவிடக்கூடும் என அமைச்சர்கள் அறிவித்து வந்தனர்; அதுவும் பொய்யாகிவிட்டது.

இங்கு கிடைக்கும் புதிய சாகுபடி நெல்லை சந்தைக்குக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்கத் தவறிவிட்டது. சாகுபடியான நெல்லில் எழுபத்தைந்து சதவிகிதம் மாகாணத்துக்கு வெளியே ஏற்றுமதி செய்யப்பட்டும் வருகிறது.

இங்கு மக்கள், அரிசி கிடைக்காதும், கிடைக்கும் அரிசியும் மலிவான விலைக்குக் கிடைக்காமலும் திண்டாடிக்கொண்டிருக்கின்ற அவலட்சணத்தில் இருக்கின்றபொழுது, இங்கு சாகுபடியான நெல்லில் முக்கால் பகுதி வெளி மாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதும், அதைப்பார்த்துக்கொண்டு நமது அமைச்சர்கள் வாய்மூடிக் கிடப்பதும் வேதனைதரும் விசித்திரமாகும்.

மூல உணவுப் பொருளான அரிசி கிடைக்காமல் இங்குள்ளார் திண்டாடுகிறார்கள். அதே நேரத்தில் இங்கு விளைவிக்கப்பட்ட நெல், இங்குள்ள மக்கள் பசியினால் பதறிக் கொண்டிருக்கும்போதே, புகைவண்டியில் ஏற்றி வெளிமாகாணங்களுக்குக் கடத்திச்செல்லப்படும் அதிக்கிரமச் செயல் நடந்து கொண்டு இருக்கிறது; இவ்வதிக்கிரமத்தைத் தடுக்கவேண்டுமே என்ற நியாய புத்தியும் நல்லெண்ணமும் இல்லாது, 'பச்சைத் தமிழ்' அமைச்சர்கள் டில்லிக்குப் பராக்குக் கூறிக்கொண்டு பதவியில் வீற்று இருக்கின்றனர்.

'இந்திய அரசாங்கமெடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக இரண்டு மாதங்களுக்கு முன்னால் இருந்த அரிசி விலை ஏற்றம் இப்பொழுது கட்டுப்படுத்தப்பட்டு விட்டது' என்று இந்தியப் பேரரசின் உணவு அமைச்சர் உல்லாசமாகப் பேசிக்காட்டுகிறார். அதைவிட ஆச்சரியப்படத்தக்க நிலையில், சென்னை அரசாங்க அதிகாரிகள் 'அரிசியின் விலை குறைவு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அடுத்துவரும் அறுவடைவரையில் விலை ஏற்றம் தொடர்ந்திருக்கும்' என்று திட்டவட்டமாகக் கூறுகின்றனர்.

இந்திய அரசாங்கம் அப்படி! சென்னை அரசாங்கம் இப்படி!

'எங்கள் நடவடிக்கையால் அரிசி விலை இறங்கிவிட்டது' என்கிறது இந்தியப் பேரரசு!

'அடுத்த அறுவடைவரை விலை ஏற்றம் தொடர்ந்து இருக்கும்' என்கிறது சென்னை அரசாங்கம்.

இங்கு மக்கள், அரிசிகிடைக்காது திண்டாடிக் கிடக்கின்றனர். கிடைக்கும் அரிசியையும் அதிக விலை கொடுத்து வாங்கி அவதிப்படுகின்றனர். அமைச்சர்களோ உண்டு கொழுத்து உல்லாச வாழ்வு வாழ்ந்து ஊர்மக்களுக்கு உபதேசம் செய்து வருகின்றனர்!

மக்களின் துன்பங்களைத் துடைக்கத் திறனற்ற—கவலையில்லாத அரசாக, இன்றைய காங்கிரசு அமைச்சு இருக்கிறது. இதைத் துடைப்பதில்தான் நமது துன்பம் துடைக்கப்படுவதும் இருக்கிறது.

வெளிநாடுகளுக்கான துணி நெய்ய!

12,500 தறிகள் ஒதுக்க முடிவு

ஆமதாபாத், நவ. 22—

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான துணி உற்பத்திக்காக, தானே இயங்கும் தறிகளை ஒதுக்கும் திட்டத்தை இந்திய சர்க்கார் பூர்த்தி செய்துள்ளதாகவும், இதற்கென மொத்தமாக 14,500 தறிகள் ஒதுக்கத் திட்டமிட்டதில், இப்போது உடனடியாக 12,500 தறிகளே ஒதுக்கப்படுமென்றும் மீதியுள்ள 2,000 தறிகளும் பின்னர் ஒதுக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

இதற்கென நாட்டின் பல்வேறு 'யூனிட்'டுகளிலுமிருந்து 30,000 மனுக்கள் சர்க்காருக்குக் கிடைத்துள்ளனவாம். இத்தறிகள் ஒதுக்கப்படும்போது, அவற்றிற்குத் தேவையான கதிர்களும் அனுமதிக்கப்படுமாம்.

தானே இயங்கும் தறிகளின் மூலம் ஆண்டொன்றுக்கு குறைந்த பட்சம் 26,25,00 000 கெஜம் துணி உற்பத்தி செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

பண்டிதரின் பஞ்சசீலம் பஞ்சாய் பறக்கிறது!

புதுடில்லி, நவ. 22—

"கடந்த வெள்ளியன்று, மக்கள் சபையில் தாங்கள் 'பரஸ்பர ஒத்துழைப்பு' குறித்துப் பேசினீர்கள்; ஆனால் அதே நாளில் ரஷ்யா அணுப் பரிசோதனை ஒன்றைச் செய்திருக்கிறதே; எப்படி இது 'பஞ்சசீலக்' கொள்கைக்கு ஒத்துவரும்?"

என்று, டில்லி மக்கள் சபையில், தோழர் எச். வி. காமத் நேரு பண்டிதரை வினவினார்.

"இது பற்றிய செய்திகளை நாம் பத்திரிகைகள் வாயிலாகப் படித்தோம் இம்மாதிரியான பரிசோதனைகள் நடைபெற்றதற்காக வருந்துகிறோம். இம்மாதிரியான அணுப் பரிசோதனைகளை நடத்தாமல் இருப்போம் என்று வல்லரசுகள் ஒப்புக்கொள்ளாமல் இருப்பதுதான் இந்தக் கொள்கையில் 'துரதிருஷ்டகரமானது' என்று குறிப்பிட்டாராம்!

மீண்டும் தோழர் காமத், "நான் சோவியத் யூனியனைப்பற்றி மட்டுந்தான் கேட்டானே தவிர, இதர வல்லரசுகளைப் பற்றிக் கேட்கவில்லை: ஏனென்றால், 'பஞ்சசீல' ஒப்பந்தத்தில் சோவியத் வல்லரசு மட்டுந்தானே கையெழுத்திட்டிருக்கிறது?" என்று கேட்டார்.

"இந்த அணுப் பரிசோதனைகளுக்கும் பஞ்சசீலத்திற்கும் நேரிடையான சம்பந்தமே கிடையாது" என்று பண்டிதர் பதிலிறுத்து மழுப்பியுள்ளார்.

சர்க்கார் ஊழியர் கிராக்கிப்படி விவகாரம்

மாநிலங்கள்சபையில் கேள்வி

புதுடில்லி, நவ. 22—

"கெசட் பதிவில்லாத சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படும் கிராக்கிப் படியை மாற்றி அமைப்பது சம்பந்தமாக சென்னை மாநில சர்க்கார் ஏற்படுத்தின விசேடக் குழு ஒன்றின் சிபாரிசுகள், சென்னையிலிருந்து, மாநிலப் புனரமைப்பின் கீழ் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள கேரள மாநிலத்திற்குச் செல்லும் சென்னை ஊழியர்களுக்கும் பொருந்துமா?" என்று மாநிலங்கள் சபையில் கேள்வி ஒன்று எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளிக்கும்போது, உள்நாட்டமைச்சர் தத்தார், 'சென்னை சர்க்காருக்கு அந்தக் குழு தெரிவித்த சிபாரிசுகளோ அதையொட்டி சென்னை சர்க்கார் பிறப்பித்த உத்தரவோ இந்திய சர்க்காருக்கு இன்னும் கிடைக்கவில்லை; இது குறித்து சென்னை சர்க்காரிடம் தகவல் தருமாறு கேட்டிருக்கிறோம்' என்று குறிப்பிட்டுவிட்டு, சாதாரணமாக இது போன்ற பிரச்சினைகளில், சென்னை மாநிலத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்ற ஊழியர்களின் பிரச்சினைகள் எல்லாம், கேரளத்தில் பணியாற்றும் மற்ற ஊழியர்களோடு சேர்த்தே கவனிக்கப்பட வேண்டும் என்றாலும், இது குறித்து சென்னை சர்க்காரின் தகவல் கிடைத்தவுடன் மத்திய சர்க்கார் அதனைப் பரிசீலிக்கும் என்று கூறியிருக்கிறார்.

சென்னையில் நியாய விலைக் கடைகள்

எண்ணிக்கை உயருகின்றன

சென்னை, நவ 20—

சென்னை நகரத்தில் சர்க்கார் அரிசியை விற்பனை செய்யும் சில்லறை வியாபாரிகளின் (நியாய விலைக் கடைகள்) எண்ணிக்கையை டி. யூ. சி. எஸ். கிறுவனக் கிளைகள் நீங்கலாக, 100-லிருந்து 182-ஆக உயர்த்தியுள்ளதாகத் தெரிகிறது.

இந்தக் கடைகளில் நாளொன்றுக்கு 20 மூட்டை அரிசி பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும், ஒரு ஆளுக்கு 2படி அரிசி வீதம் பங்கீடு செய்யப்படுமென்றும் கூறப்படுகிறது.

21 வயதுக்குட்பட்டவரும் 'சிறுமி'களே!

விபசாரத்தில் ஈடுபடும் ஆண்களுக்கும் தண்டனை தரப்பட வேண்டும்

விபசாரத் தடை மசோதா தனிக் குழு சிபாரிசு

புதுடில்லி, நவ. 22—

இதுவரையிலும், சட்டப்படி, 18 வயதுக்குட்பட்ட பெண்கள் அனைவரும் 'சிறுமி'கள் என்று அழைக்கப்பட்டனர்; இப்போது, அந்த வயது வரம்பை 21-ஆக உயர்த்தி, 21 வயதுக்குட்பட்ட பெண்கள் அனைவரும் 'சிறுமி'யரே என்று, பெண்கள்—சிறுமிகள் விபசாரத் தடை மசோதா பற்றிய தனிக் குழு ஒன்று வரையறை செய்திருக்கிறதாம்!

அதிக அளவிற்குப் பெண்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்ற நோக்கத்துடனேயே, 'சிறுமி'கள் என்ற சொல்லுக்கு வியாக்கியானம் தரும் வகையில், அவர்களுடைய வயது வரம்பை உயர்த்தி அக்குழு மேற்கண்ட சிபாரிசைச் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

முன்னால் இருந்த விபசாரத் தடை குறித்த மசோதா மூலம், விபசாரம் நடத்தும் பெண், சிறுமி ஆகியோரை மட்டுமே தண்டிக்க முடியும்; ஆனால், இப்போது அப்படிப்பட்ட பெண்கள், சிறுமியரை மட்டுமின்றி, ஆண்களையும்கூடத் தான் தண்டிக்க வேண்டும் என்றும் அக்குழு சிபாரிசு செய்திருக்கிறதாம்.

மேலும், இந்த மசோதாவின் கீழ் ஏற்படுத்தப்பட இருக்கும் 'பாதுகாப்பு விடுதி'களை அங்கு தங்கியிருக்க விரும்பும் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் திறந்துவிட வேண்டுமென்றும், அவற்றில் தங்கியிருக்கத் தகுதி பெற்றவர்கள்தான் என்பதற்கு அடையாளமாக அப்பெண்கள் ஒரு மாஜிஸ்திரேட்டின் அத்தாட்சி பெற்றிருக்க வேண்டும் என்றும் அக்குழுவினர் தமது சிபாரிசில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

மூன்று நாடுகளின் மதிப்பற்ற போக்கு!

வெளியேறும் கோரிக்கைக்கு வேடிக்கையான பதில்

இரு தினங்களுக்குமுன், ஐ நா. பொதுச்சபை செயலாளர், பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு எகிப்திலுள்ள தங்கள் தங்கள் படைகளை திரும்பப் பெறுவதில் ஏற்படும் தாமதம் பற்றி குறிப்பிட்டு எழுதிய கடிதத்திற்கு அந்நாடுகள் பதிலளித்திருக்கின்றன.

பிரிட்டனின் நல்லெண்ணத்திற்கு அறிகுறியாம்!

பிரிட்டனின் பதிலில் 'நல்லெண்ணத்திற்கு அறிகுறியாக, போர்ட் செய்த் பகுதியிலிருந்து தன்னுடைய ஒரு பட்டாளத்தை மட்டும் பிரிட்டன் திரும்பப் பெற்றுக்கொள்ளும்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

மூன்றில் ஒரு பகுதி வெளியேறியதாம்!

'சூயஸ் நடவடிக்கையில் கலந்துகொண்ட பிரெஞ்சுத் துருப்புகளில மூன்றில் ஒரு பங்கு ஏற்கனவே போர்ட் செய்த் பகுதியிலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது,' என்றும் அப்படைகள் அனைத்தும் கடற்படைப் பிரிவுகள் என்றும் பிரெஞ்சு கூறியுள்ளது

வெகுதூரம் சென்றுவிட்டதாம்

இஸ்ரேல் சர்க்கார் தந்திருந்த பதிலில், எகிப்து போர் முனைகளிலிருந்து வெகுதூரத்திற்கப்பால் இஸ்ரேல் படைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பிரிட்டனுக்கு சூடு!

எகிப்திலுள்ள பிரிட்டிஷ் படைகள் அனைத்தையும் உடனடியாக திரும்பப்பெற்றாக வேண்டும் என்பதே தனது கருத்து என்று அமெரிக்கா பிரிட்டனுக்குத் தெரிவித்துள்ளதாம்.

மனித உரிமைகளை மீறும் கொடுமை!

'போர்ட் செய்திலுள்ள பிரிட்டிஷ்—பிரெஞ்சுப் படைகள் பிடிவாதமாக மனித உரிமைகளை மீறி வருகின்றன' என்று, ஐ நா.-விலுள்ள எகிப்தின் நிரந்தரப் பிரதிநிதி, ஐ நா. பொதுச் செயலாளருக்குக் கடிதம் ஒன்றின் மூலம் தெரிவித்திருக்கிறார்.

திரித்துக் கூறப்படுகிறதாம்!

சூயஸ் பகுதியில், அண்மையில் நடைபெற்ற பிரிட்டிஷ்—பிரெஞ்சு நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்ட எகிப்திய சேதம் குறித்த உண்மைச் செய்திகளெல்லாம் வேண்டுமென்றே திரித்துக் கூறப்பட்டு வருகின்றன என்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருக்கிறார்.

சிரியாவின் எச்சரிக்கை!

எகிப்திலிருந்து ஆக்கிரமிப்பாளர் வெளியேறவிட்டால், சிரியா வழியாக இராக் எண்ணெய்க்குழாய்கள் போக முடியாதென்று அமெரிக்கத் தூதவரிடம் சிரியா கூறியுள்ளதாகத் தெரிகிறது.

3-வது உலக யுத்தமா?

எகிப்தில், பிரிட்டிஷ்—பிரெஞ்சு—இஸ்ரேல் தலையீட்டின் விளைவாக, ஒரு மூன்றாவது உலக யுத்தம் மூளக்கூடிய அபாயம் ஏற்பட்டிருப்பதாக ரஷ்ய அயல் நாட்டு அமைச்சர் கூறியுள்ளார்

வினையின் பயன்!

ஒரு காலனுக்கு அதிகமாக வீடுகளில் பெட்ரோல் வைத்திருக்கக் கூடாதென, பிரெஞ்சு சர்க்கார் பாரிஸ் நகரில் தடை உத்தரவு பிறப்பித்திருக்கின்றனராம்.

காலமறிந்த உதவி!

ஆக்கிரமிப்புக்கு ஆளாகித் துன்புறும் எகிப்து மக்களுக்கு நன்கொடையாக இந்தியா 2,000 இராத்தல் காப்பியும், 500 இராத்தல் தேயிலையும், 3,780 இராத்தல் மருந்துச் சாமான்களும் அனுப்பியுள்ளது.

நெல்லை சந்திப்பில் கே. வி. கே. சாமி நினைவு மன்றத் திறப்பு விழா

19—11—56 மாலை சுமார் 6½ மணியளவில் திருநெல்வேலி சந்திப்பையடுத்த சிந்துப்பூந்துறையில் நெல்லை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் டபிள்யு. டி. துரைசாமி தலைமையில் கே. வி. கே. சாமி நினைவு மன்றத் திறப்பு விழா நடைபெற்றது.

தூத்துக்குடி நகரச் செயலாளர் ஜோசப், மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமி உருவப் படத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினர்.

பின்னர், தோழர் என். பி எம். அப்துல்காதர் அவர்கள் கழகக் கொள்கைகள் குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

மன்றத்தில் தி. மு கழகக் கொடியை ஏற்றிவைத்து, தோழியர் ஜோதி அம்மையார் அவர்கள், தோழர் சாமி அவர்கள் விட்டுச் சென்ற பணியினைத் தொடர்ந்து அம்மன்றத்தவர் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், இந்நாட்டுப் பெண்கள் மூடநம்பிக்கை, அறிவின்மை, பெண்ணடிமை ஆகியவற்றுக்கு ஆளாகி தாய்க்குலம் தன்மானம் பெறாத காரணத்தால் நாட்டின் ஆட்சி நிலை ஒழுங்கற்றுக் கிடப்பதைச் சுட்டிக் காட்டியும், அந்த நிலையை மாற்ற சென்னையில் ஏற்படுத்தப்பட்ட மகளிர் மன்றத்தின் கிளையாக ஒரு மகளிர் மன்றம் இங்கு ஏற்படுத்த இருப்பதாகவும், அதற்குத் தாய்மார்கள் அனைவரும் தங்கள் ஆதரவைத் தருமாறு கேட்டுக்கொண்டும், இந்நாட்டில் பகுத்தறிவுடன் ஆட்சி நடைபெற்று, திராவிடம் உலக வரலாற்றில் இடம்பெற, வரும் பொதுத் தேர்தலில் தி. மு. கழகத்திற்குத் தங்கள் வாக்குகளை அளித்து வெற்றிபெறச் செய்யுமாறு கேட்டுக்கொண்டும் சொற்பொழிவாற்றினர். (ந-தி.)

இலங்கையில் தோழர் கி. மனோகரன்

யாழ்ப்பாணம் கிளைக் கழகத் துவக்க விழா

11—11—56 மாலை 4½ மணியளவில் யாழ்ப்பாணம் கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் தோழர் தமிழ்நாதன் தலைமையில் யாழ்ப்பாணம் தி. மு கழகக் கிளைத் துவக்கவிழா சிறப்புற நடைபெற்றது.

கழகத் தோழர்களின் கொடி வணக்கத்துடன் இசை முழங்க தோழர் கி. மனோகரன் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

இலங்கை தி. மு. கழகச் செயலாளர் இரா. அதிமணி கிளைக் கழகத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினர். அடுத்து தோழர் சுந்தரராசன், ஈழத்தில் தி. மு. கழகம் குறித்து விளக்கவுரையாற்றினர்.

இறுதியில் தோழர் மனோகரன் சொற்பொழிவாற்ற எழுந்ததும் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களின் பேராரவாரத்திற்கிடையே தோழர் மனோகரன் அவர்களுக்கு யாழ்ப்பாணம் தி. மு கழகச் சார்பில் தோழர் சங்கரசுப்பு கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்பிதழும் வாசித்தளித்தார்.. பல எதிர்ப்புகளிடையேயும் உறுதி குலையாது, அண்ணா அவர்களின் கொள்கைவழி நடந்து செல்லும் யாழ்ப்பாணம் கிளைக் கழகத்தினரின் ஆற்றலுக்கும் உறுதிக்கும் பாராட்டுதலும் மகிழ்ச்சியும் தெரிவித்துக்கொண்டு 'பழைமையும் புதுமையும்' என்ற தலைப்பில் தோழர் கி. மனோகரன் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

தோழர் இரா. திருமறவன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. தி)

சட்டக் கல்லூரியில் கண்ணதாசன்

தமிழ் மன்ற விழாவில் சொற்பொழிவு

சென்னை, நவ. 23—

21-11-56 அன்று மாலை, சட்டக் கல்லூரி தமிழ் மன்ற முத்தமிழ் விழா, கல்லூரி மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

மண்டபத்திற்கு உள்ளும் புறமும் எண்ணற்ற மாணவர்களும் தோழர்களும் நிரம்பியிருந்தனர்.

மன்றச் செயலாளர் தோழர் மாயாண்டி அனைவரையும் வரவேற்றுப்பேசினர். அவர் முன்மொழிய தோழர் கஜபதி வழிமொழிய, பேராசிரியர் கோபாலகிருஷ்ணன் விழாக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினர்.

அவரது சிறுநேரத் தலைமையுரைக்குப்பின் 'இலக்கியத்தில் காதல்' என்ற தலைப்பில் தோழர் கண்ணதாசன் அவர்கள் அரியதோர் சொற்பொழிவாற்றி கூடியிருந்தோரை மகிழ்வித்தார்.

தோழர் மாயாண்டி நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

தலைவருக்கும் கண்ணதாசன் அவர்களுக்கும் மன்றச் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. (ந. தி.)

சென்னையில் குடிதண்ணீர் வசதி!

பூண்டி நீர்த் தேக்கத்தில் நீர் நிரம்பி வழிந்து கடலில் கலந்து வீணாகிறது; என்றாலும், சென்னை நகர மக்களுக்கு குடிதண்ணீர் வசதி அதிகம் கிடைக்கவில்லை; காரணம், கீழ்ப்பாக்கம் நீர்வடி நிலையத்தின் கொள் அளவு மிகக் குறைவாயிருப்பதுதான் என்றும், 'வரும் அக்டோபர் திங்களில், புதிய நீர்வடி நிலையம் அமைக்கப்பட்டதும் தினம் ஒரு கோடி காலன் தண்ணீர் அதிகமாக நகருக்குக் கிடைக்கும்' என்றும் கூறப்படுகிறது.

ஐ. நா. சபை மீது சர்ச்சில் பாய்கிறார்!

'ஐக்கிய நாடுகள் நிறுவனத்தை இந்நாட்டில் ஆதரிப்பவர்களுள் நானும் ஒருவன்தான்; ஆனால் சூயஸ் கால்வாய் பிரச்சினையை பைசல் செய்வதில் ஐ நா. சபை மேற்கொண்ட முடிவு—பிரிட்டனைக் கண்டித்த செயல் விவேகமற்றது; உபயோகமற்றது" என்று, பிரிட்டனின் முன்னாள் பிரதமரான சர். வின்ஸ்டன் சர்ச்சில் தம் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில், சூயஸ் கால்வாயை மூட எகிப்து சர்க்கார் மேற்கொண்ட நடவடிக்கைகள், எகிப்தின் பொருளாதாரத்திற்கு மட்டுமல்லாமல் மற்ற நாடுகளின் பொருளாதாரத்திற்கும் பெருத்த அதிர்ச்சியாகும். இதன் விளைவாக, உலகில் அமைதியின்மை ஏற்பட்டு நீடிக்கின்றது, மத்தியக் கிழக்கு நாடுகளிலும்—பொதுவாக உலக முழுமையிலுமே பொருளாதாரத் துறையில் கஷ்டத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டுவிட்டு, அவர் 'நாங்கள் (பிரிட்டன்) செயலற்றிருந்துவிட்டு, மத்தியக் கிழக்கு நாடுகள் அனைத்திலும் குழப்பத்தை ஏற்படுத்தி அவற்றையெல்லாம் ரஷ்ய ஆதிக்கத்தின்கீழ் படிப்படியாக நழுவிப் போகவிட்டுவிடவேண்டும் என்று ஐ. நா.-வினர் விரும்புகிறார்களா?' என்றும் கேட்டிருக்கிறார்.

பம்பாயில் கழக முழக்கம்

பல பகுதிகளில் பொதுக்கூட்டங்கள்

தோழர் டி. கே. சீனிவாசன் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

9—11—56 பிற்பகல் 1 மணிக்கு தோழர் டி. கே. சீனிவாசன் பம்பாய் வந்தடைந்தார்.

தாதர் புகைவண்டி நிலயத்தில் பம்பாய் மத்தியக் குழுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன், தாராவி, மாதுங்கா, பாண்டுப் போன்ற கிளைக் கழகத் தோழர்களும் திரண்டு தோழர் டி. கே. சீனிவாசனை வரவேற்றனர்.

அன்று இரவு 8-40 மணிக்கு ஆமதாபாத் புறப்பட்டுச் சென்று 10, 11 ஆகிய இரு நாட்களிலும் அங்கு தங்கி, கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு 12-ந் தேதி மாலை மீண்டும் பம்பாய் வந்துசேர்ந்தார்.

தி.மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம்

13—11—56 இரவு 8 மணிக்கு மாதுங்கா—போதார் கல்லூரியில் தோழர் சுப. குமார் தலைமையில் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. பல கிளைக் கழகத் தோழர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர். தோழர் டி. கே. சீனிவாசன் கழகத் தோழர்களுக்கு அரியதோர் கருத்துரை வழங்கினர். தோழர் சு. தங்கவேலன் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

தங்கையா — முத்தம்மாள் திருமணம்

தாராவி தி மு. கழகத் தோழர் பி. எஸ். தங்கையா—தோழியர் முத்தம்மாள் திருமணம் தோழர் சு. வள்ளிநாயகம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள். டி. கே. சீனிவாசன், எஸ் தியாகராசன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திச் சொற்பொழிவாற்றினர்.

அந்தேரி கிளைக் கழகத்தை பார்வையிடல்

15—11—56 பகலில், தோழர் எஸ். தியாகராசனுடன், தோழர் டி. கே. சீனிவாசன் அந்தேரி சென்று கிளைக் கழகப் பணிமனையைப் பார்வையிட்டு, கழகத் தோழர்களுடன் உரையாடினர்.

மாதுங்கா கிளைக் கழக 3-வது ஆண்டு விழா

15—11—56 மாலை மாதுங்கா கிளைக் கழக 3-வது ஆண்டு விழா சம்பூ தோட்டத்தில் தோழர் இ சு. பிச்சையா தலைமையில் நடைபெற்றது. தோழர் அன்புச்செழியன் வரவேற்புரையாற்றினர். தோழர் டி. கே. சீனிவாசன் இன்றைய அரசியல் நிலைகளையும் தி. மு. கழக வளர்ச்சி குறித்தும், ஆட்சியினரின் ஊழல்களையும் மாற்றுக்கட்சிகளின் பித்தலாட்டங்களையும் விளக்கி அரியதோர் உரை நிகழ்த்தினர்.

தாராவி தி.மு. கழக 7-வது ஆண்டு விழா.

16—11—56 அன்று தாராவி குட்டிவாடித் திடலில், தோழர் த. மு. பொற்கோ தலைமையில் தாராவி தி.மு கழக 7-வது ஆண்டு விழா சிறப்புற நடைபெற்றது தோழர் எம். இராசாமணி இயக்கப் பண் பாடினர். தோழர் பி. எஸ் எஸ் பாண்டியன் வரவேற்புரையாற்றினர். தலைவர் தமது உரையில், கழகத்தின்மீது மாற்றார் ஏவிவரும் தாக்குதல்களையெல்லாம் நல்ல உரமாகக்கொண்டு கழகம் மேலும் வளர்ந்து வருவதை குறிப்பிட்டும், தி. மு கழகத் தேர்தல் நிதிக்குக் கழகத் தோழர்களும் பொதுமக்களும் உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டும் சொற்பொழிவாற்றினர்.

தோழர் எஸ். தியாகராசன் கழகக் கொடியேற்றுவித்து, கொடியின் தத்துவங்களை விளக்கியும், மாற்றுக் கட்சியினரின் அழுக்காறு நிறைந்த வரலாற்றை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

தோழர் இலங்கை சண்முகம் சிறிதுநேரம் இலக்கிய ஆய்வுரை வழங்கியபின், தோழர் இரா. வளர்மதி ஆண்டறிக்கை வாசித்தார்.

பின்னர் தோழர் டி. கே. சீனிவாசன் பேச எழுந்ததும், பம்பாய் தி.மு.கழக மத்தியக் குழு, தாராவி, அந்தேரி, கம்பாலாஹில், மாதுங்கா, பாண்டுப், கொலாபா ஆகிய கிளைக் கழகங்கள் சார்பிலும், தோழமை இல்லம், சௌந்திர பாண்டியனார் பகுத்தறிவு மன்றம், பாண்டுப் முத்தமிழ் மன்றம் ஆகியவை சார்பிலும், மலர்க்கொடி சலவை நிலயச் சார்பில் தோழர் கோ பாண்டியன், தோம்பிவ்லி ஒ்சலை அகச் சார்பில் சண்முகம் ஆகியோரும், தோழர்கள் சி. த. மு. இர. ஆரியசங்காரன், செல்லச்சொல்லாளன் ஆகியோரும் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவித்தனர்.

மற்றும் நாங்குனேரி வட்டார ஆதிதிராவிடர் சங்கம், திருவள்ளுவர் கலாமன்றம், ப தெ. இ. யாதவர் சங்கம் ஆகிய நிறுவனங்கள் சார்பில் வாழ்த்துச் செய்திகளும் வந்திருந்தன.

பின்னர் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் அரியதோர் கருத்துரை வழங்கினர்.

பின்னர், தோழர்கள் கே. வி. கே. சாமி, சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிடுமாறு வற்புறுத்தியும், மற்ற மாநிலங்களில் இணைந்துள்ள தமிழ்ப் பகுதிகளையெல்லாம் தமிழகத்துடன் இணைக்குமாறு கேட்டுக்கொண்டும், காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேறுமாறு கேட்டுக்கொண்டும், இரங்கூன் — சென்னைக்கிடையே சீரான கப்பல் போக்குவரத்து ஏற்படுத்தவும் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வழியனுப்பு நிகழ்ச்சி

பம்பாய்—ஆமதாபாத் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் 17-11-56ல் தாயகம் புறப்பட்டார். பம்பாய் மத்தியக்குழுச் செயலாளர் எஸ் தியாகராசன், மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், தோழர்கள் அனைவரிடமும் விடைபெற்றுக்கொண்டு, பிற்பகல் 3-20 மணிக்கு சென்னை வண்டியில் ஏறி தோழர்கள் அனைவரிடமும் விடைபெற்றார். (ந. தி.)

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு அன்பளிப்பு

18-11-56 மாலை காட்பாடி (வ. ஆ. மா) கிளைக் கழகச் சார்பில் தோழர் இலட்சுமணன் தலைமையில் நடைபெற்ற தமிழக அமைப்பு நாள் விழாக் கூட்டத்தில் தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, வேலம் தம்பிதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்டத்தில் வசூலான ரூ 7-11-0 தேர்தல் நிதிக்காகத் தரப்பட்டது.

பிரெஞ்சு செலாவணிக்கு புதுவையில் முற்றுப்புள்ளி

புதுடில்லி, நவ. 23—

முன்னாள் பிரெஞ்சிந்தியப் பிரதேசங்களிலிருந்து, முழு அளவில் பிரெஞ்சு செலாவணிகள் திரும்பப் பெறப்பட்டுவிட்டதாம்.

பிரெஞ்சு செலவாணிக்குப் பதிலாகச் சென்ற மாதம் வரையில், இந்தியச் செலவணி ரூ. 37,14,800 வெளியிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

சுலபமானதாக்கிக்கொள்ளும்
'நேர்மை உள்ளம்'

பிரிட்டன் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமாம்

நியூயார்க், நவ 22— 'ஜிப்ரால்டர் பற்றிய தகராறை யும் ஐ நா. சபைக்கு எடுத்துச் செல்லாமல், நேரடியாகவே பேச்சு வார்த்தைகள் நடத்துவதின் மூலம் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள பிரிட்டன் தனது 'நேர்மை உள்ளத்தை' சுலபமான தாக்கிக் கொள்ளவேண்டும்" என்று, ஐ. நா. சபையில் ஸ்பெயின் நாட்டுப் பிரதிநிதி கூறியிருக்கிறார்.

ருமேனியத் தூதுவருக்கு வெளியேற்ற உத்தரவு

அர்ஜெண்டைனா சர்க்கார் திடீர் நடவடிக்கை

பியூனஸ் அயர்ஸ், நவ. 23— அர்ஜெண்டைனாவிலுள்ள ருமேனியத் தூதவர் 'விரும்பத்தகாதவர்' என்று அந்த நாட்டு சர்க்கார் அறிவித்ததுடன், இன்னும் 24 - மணி நேரத்திற்குள்ளாக அவர் அர்ஜெண்டைனாவை விட்டு வெளியேறியாக வேண்டும் என்றும் அர்ஜெண்டைனா சர்க்கார் உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளதாம்.

இந்த வெளியேற்ற உத்திரவிற்கு என்ன காரணம் என்று அர்ஜெண்டைனா தெரிவிக்கவில்லையாம்.

பொதுத்தேர்தல்?

புதுடில்லி, நவ 21— சட்டசபை, மக்கள் சபை தொகுதி நிர்ணயக் குழுவின் அறிக்கை டிசம்பர் திங்களுக்குமுன் அறிவிக்கப்பட மாட்டாதாம்; தொகுதி நிர்ணயம் அக்டோபரில் வெளியிடப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த.

'இந்தத் தாமதத்தின் காரணமாக பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்படுமா?' என்று மக்கள் சபையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, தேர்தல் கமிஷன் வேலைகளை அரசாங்கம் துரிதப்படுத்தி வருவதாகவும், அதற்குமேல் ஒன்றும் கூற முடியாது என்றும் அமைச்சர் பிஸ்வாஸ் தெரிவித்தார்.

நேட்டோரா, சேதி!

ஜெர்மன் பிரதேசங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க, ரஷ்ய, பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகளை, அடுத்த ஆண்டிற்குள் மூன்றில் ஒரு பகுதியாகக் குறைத்துவிட வேண்டும் என்று ரஷ்ய அயல் நாட்டமைச்சர் ஷெபிலாவ், ஐ நா. சபையில் பிரரேபித்திருக்கிறாராம்.

அந்தப் படைபலக் குறைப்பு சரியான கட்டுப்பாடுடன் நடைபெற வேண்டும் என்றும் அவர் தனது பிரரேபணையில் குறிப்பிட்டிருக்கிறாராம்.

பிராவிடண்ட் நிதி வசதி

வர்த்தக நிலையங்களுக்கும் அமுலாக்க மசோதா

புதுடில்லி, நவ. 23— தோட்டங்கள், சுரங்கங்கள், வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் பிராவிடண்ட் நிதி சட்டத்தன் மூலம் வசதிகளைச் செய்வதற்கான மசோதா ஒன்றை மக்கள் சபையில் தொழிலாளர் அமைச்சர் அபித் அலி கொண்டுவந்தார்.

தற்போதுள்ள சட்டத்தின்கீழ், தொழிற்சாலைகள் அல்லாத தொழில்களுக்கு இதைப் பரவலாக்க முடியவில்லை; எனவே இந்த புதிய சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

புதுடில்லி, நவ. 23— பாகிஸ்தானிலிருந்து சிந்தி பசுக்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் சிந்தித்து வருவதாக விவசாய அமைச்சர் டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக் மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

இரயில்வேயில் எல்லை வரி விதிக்க மசோதா

டில்லி மக்கள் சபையில் நிறைவேற்றம்

புதுடில்லி, நவ. 21— மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்வோருக்கு எட்டணா வரையிலும், இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்வோருக்கு ஒரு ரூபாய் வரையிலும், முதல் வகுப்பு குளிர் சாதனப் பெட்டிகளில் பிரயாணம் செய்வோருக்கு ஒன்றரை ரூபாய் வரையிலும், இந்திய இரயில்வேயில் எல்லை வரி (டெர்மினல் வரி) என்ற புதிய வரி விதிக்கும் மசோதா ஒன்று மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இது 'யாத்திரை ஸ்தல'ங்களுக்கும், பொருட்காட்சிகளுக்கும் சென்றுவரும் இரயில்வே பிரயாணிகளைப் பாதிக்கும்.

இந்த வரி ஏன் ?

இந்த வரி மூலம் கிடைக்கும் வருமானம், தல தாபனங்களுக்கு அவற்றின் பணத் தேவையைப் பூர்த்திசெய்வதற்காகத் தரப்படும் என்றும், அந்தத் தாபனங்களின் பணத் தேவையை அறிந்து, மாநில சர்க்காரின் ஆலோசனையுடன் ஒவ்வொரு முறையும் 'டெர்மினல் வரி' அளவு நிர்ணயிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது, மக்கள் சபையில்!

சாலைப் பிரயாணிகளுக்கும் வரி

இதே போல, சாலைகள் வழியாகப் பிரயாணம் செய்வோருக்கும் (பஸ், வண்டி முதலியன மூலம்) வரி விதிக்குமாறு, மாநில சர்க்கார்கள் டில்லி சர்க்காரால் கேட்கப்பட்டிருக்கின்றனராம்.

வசூலிப்பதற்காகும் செலவை மட்டும் எடுத்துக்கொண்டு, பாக்கியை தலதாபனங்களுக்கு சர்க்கார் தருவராம்.

கோதாவரி உபரி தண்ணீர்

சென்னைக்குத் தர ஆந்திர முதலமைச்சர் சம்மதம்

ஐதராபாத், நவ. 22— கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணையாறு ஆகிய மூன்று நதிகளையும் ஒரு கால்வாயின் மூலம் இணைத்து, கோதாவரிநதியின் உபரி தண்ணீர சென்னை, திரு-கொச்சி மாநிலங்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான பூர்வாங்க பரிசோதனை வேலைகள் விரைவிலேயே மேற்கொள்ளப்படும் என்று ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி கூறியிருக்கிறார்.

இந்த வேலைகளை மேற்கொள்வதற்கென ஆந்திர சர்க்கார் நிபுணர் ஒருவரை நியமிக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சம்பள உயர்வு கோரி 'நோட்டீஸ்' தரப்படும்

ஆமதாபாத், நவ. 23— தனிப்பட்டோர் நிர்வாகங்களில் துணி, சிமெண்ட், நிலக்கரி, உருக்கு, சர்க்கரை, சணல், எஞ்சினீயரிங் ஆகிய தொழில்களில் நியாயமான அளவு ஊதிய உயர்வு தரப்பட வேண்டுமென்றும், இத்தொழில்களுக்கெல்லாம் ஊதியக் குழு நியமிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டு 'நோட்டீஸ்' அனுப்புவதென இந்திய தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் முடிவு செய்திருக்கிறதாம்.

மேலும், சர்க்கார் துறையில் இரயில்வேக்களில் ஊதிய உயர்வு தரப்பட வேண்டும் என்றும் முதன் முதலில் கேட்கப்படுமாம்.

10-ந் தேதி பதவி ஏற்பார்

திருவனந்தபுரம், நவ. 22— சென்னை மாநிலத்தின் புதிய கவர்னராக நியமனம் பெற்றுள்ள ஏ. ஜெ. ஜான், வருகிற டிசம்பர் 10-ந் தேதியன்று பதவியேற்பார் என்று தெரிகிறது.

நடிப்பிசைப் புவலர்
கே. ஆர். இராமசாமி

★

அவர்களுக்குப் பாராட்டுக்கூட்டம்

25—11—56 மாலை 6 மணிக்கு சென்னை — கொருக்குப் பேட்டை புகைவண்டி நிலையத்திற்கு அருகிலுள்ள கிருட்டிணசாமி பிள்ளை தோட்டத்தில், தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் தலைமையில், மலாயா சென்று கலைப் பணியாற்றி, தாயகம் திரும்பிய நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களுக்கு சென்னை 5-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

25—11—56 காலை 10 மணி அளவில், சென்னை—ஆலந்தூர் தி. மு. கழக பாடியில், புலவர் அருணகிரி தலைமையில் 'மொழி' எனும் பொருள் குறித்து, செல்லத் தோழர் புகாரி, மற்றும் பல தோழர்கள் பேசுவர்.

* * *

25—11—56 காலை 9 மணியவ சென்னை 8-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகப் பணிமனையில் (எண் 23, ஜின்டா சாயபு தெரு), தோழர் மு. ப. புட்பரத்தினம் தலைமையில், 'தேர்தலில் நாம்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

25—11—56 காலை 9 மணிக்கு சென்னை—குயப்பேட்டை இராமானுசத் தோட்டத் தெருவிலுள்ள திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றப் பணிமனையில் தோழர் அ. உ. நடராசன் தலைமையில், 'உலக அரங்கில்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

25—11—56 காலை 9 மணிக்கு சென்னை—42-வது வட்ட தி. மு கழகப் பணிமனையில் (4, நமசிவாய முதலி தெரு) தோழர் வில்லவன் தலைமையில் 'எகிப்தும் ஹங்கேரியும்' எனும் தலைப்பில் சர்வகட்சித் தோழர்கள் பேசுவர்.

* * *

25—11—56 காலை 9½ மணிக்கு சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றப் பணிமனையில் தோழர் இரா. முத்துகிருட்டிணன் தலைமையில் 'மாணவரும் அரசியலும்' என்ற தலைப்பில் தோழர் சா. சிவகுமாரன் பேசுவார்

கோபி—பவானி வட்ட தி. மு. க, செயலாளர்கட்கு :

25—11—56-ல் கோபி மெயின் ரோடிலுள்ள முசாபரி பங்களாவில் கோபி—பவானி வட்ட தி மு கழகக் கிளைகளின் தேர்தல் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். கிளைக் கழகச் செயலாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

முகவரி மாற்றம்

சென்னை 35-வது வட்டத் தி. மு. கழகம்,
எண்-2, கலைத் தெரு,
கோடம்பாக்கம்—சென்னை.

இங்கிலாந்தில் பொதுத்தேர்தல்?

லண்டன், நவ. 22— நிலவிக்கொண்டிருக்கும் சர்வதேச சூழ்நிலைகள் காரணமாக சீக்கிரமே பிரிட்டனில் பொதுத் தேர்தல்கள் நடைபெறலாம் என்று பலமான வதந்திகள் உலவுகின்ற காரணத்தால், லண்டன் 'ஸ்டாக் மார்க்கெட்டு'கள் நிலைகுன்றபோய் விட்டனவாம்!

இந்த வார இறுதிக்குள் ஈடன் சர்க்காரின் 'தலைவிதி' நிர்ணயிக்கப்பட்டுவிடும் என்று 'ஈவினிங் நியூஸ்' என்ற கன்சர்வேடிவ் இதழின் அரசியல் நிருபர் எழுதியுள்ளார் என்று தெரியவருகிறது.

தேர்தல் நிதி தாரீர்!

வரவு :	ரூ. அ. பை
முன் (21—11—56) இதழ்ப்படி.	7727—0—3
தஞ்சை—மாயவரம் ஆகிய இடங்களில் தேர்தல் ஆய்வுக் குழுவினரிடம்	42—0—0
12—11—56 கருப்பூரில் அண்ணா அவர்களிடம்	9—0—0
12—11—56 குடந்தைப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்களிடம்	33-12—0
13—11—56 எத்தாப்பூர் கூட்டத்தில் அண்ணா அவர்களிடம் எத்தாப்பூர் தி. மு கழகம்	25—0—0
ஆத்தூர் தி. மு. கழகம்	50—0—0
மற்றும் பல தோழர்கள்	13—3—3
ஆக மொத்தம் ரூ	7899-15—6

குறிப்பு :—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி :—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

கழகக் கூட்டங்கள்

★

மணமேல்குடி :

அய்யனார் கோவில் திடல்
27-11-56 மாலை 4-30 மணிக்கு
பேசுவோர் :
என். வி. நடராசன்
ஜி. எஸ். மணி

குறிப்பு :—மணமேல்குடி செல்லும் வழியில், கட்டுமாவடி தி மு கழகத் தோழர்களால் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும்

★

சாத்தான்குளம் :

காந்தி மைதானம்
27—11—56 இரவு 7 மணிக்கு
தலைவர் : தி. கா. நெல்லையப்பன்
பேசுபவர் :
என். எஸ். இளங்கோ

பூவிருந்தமல்லி தி. மு. க.- மாணவர் கிளைக் கழகப் பொதுக்கூட்டம்

மு. கருணாநிதி கலந்துகொள்வார்

27—11—56 மாலை 5 மணி அளவில், பூவிருந்தமல்லி தி. மு. க.-மாணவர் கிளைக் கழக முதலாண்டு விழா— தேர்தல் நிதியளிப்பு விழாப் பொதுக்கூட்டம், சன்னதி வீதியில், தோழர் க. இளஞ்செழியன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் மு. கருணாநிதி, டி.கே. பொன்னுவேலு, டி. என். சம்பந்தம், மாணவி சற்குணம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை 2-வதுவட்ட தி. மு. கழகப் பணிமனை திறப்பு விழா

25-11-56 காலை 9-மணிக்கு, சென்னை 2-வதுவட்ட தி.மு. கழகப் பணிமனை திறப்பு விழா சென்னை—இராயபுரம் மன்னார்சாமி கோயில் தெரு, எண் 100 இல்லத்தில் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

தோழர் ஈ. வே. கி. சம்பத் பணிமனையைத் திறந்து வைப்பார்; தோழர்கள் அருணன், ப. புகழேந்தி ஆகியோர் பேசுவர்.

சென்னை மகளிர் மன்றச் செயற்குழுக் கூட்டம்

26—11—56 மாலை 4 மணிக்கு சென்னை மகளிர் மன்ற அலுவலகத்தில் (எண். 179, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு), மன்றச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். துவக்க விழா வரவு-செலவு; தேர்தல் நிதி; மன்ற ஆக்க வேலைகள் குறித்து ஆலோசிக்கப்படும். 4—11—56ல் நடைபெற்ற மன்றத் துவக்கவிழா பேச்சுகள் 'டேப் ரிக்கார்டு' மூலம் ஒலிபரப்பப்படும்.

சென்னை — வண்ணையில் கே. வி. கே. சாமி நினைவு மன்றத் துவக்க விழா

25—11—56 காலை 9 மணிக்கு சென்னை—வண்ணை சிமிட்ரி ரோடு, எண் 14 இல்லத்தில், தோழர் கே எம் கண்ணபிரான் தலைமையில் மேற்படி மன்றத் துவக்க விழா நடைபெறும். கொடியேற்றுபவர்: சா. கோ. நாராயணசாமி; மன்றத் திறப்பாளர்: அலமேலு-அப்பாதுரை; கே. வி. கே. சாமி படத் திறப்பாளர்: ப. புகழேந்தி.

வேலூர் கே. வி. கே. சாமி மன்ற சிறப்புப் பொதுக்கூட்டம்

25—11—56 மாலை 6 மணிக்கு, வேலூர் வாணொலி திடலில் (பாரஸ் மைதானத்தில்), தோழர் பி. கே. முனுசாமி தலைமையில் மேற்படி பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஏ வி பி. ஆசைத்தம்பி, என். ஜீவரத்தினம், அ. கருத்தோவியன், டி. எஸ். பிரகாசம் ஆகியோர் பேசுவர்.

[குறிப்பு :— அன்று மழையிருந்தால், கூட்டம் நகர மண்டபத்தில் நடைபெறும்.)

இலங்கை வானொலியில் கி. மனோகரன்

24-11-56 இரவு 7-45 மணிக்கு இலங்கை தேசிய வானொலியில், தோழர் கி. மனோகரன் அவர்களுடைய பேட்டிகள் ஒலிபரப்பப்படும்.

சென்னை-தூளை ஊ. பு. அ. சவுந்திர பாண்டியனர் நினைவுப் படிப்பகச் செயற் குழு

25—11—56 காலை 9 மணிக்கு மேற்படி படிப்பகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் படிப்பக மனையில் நடைபெறும். பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்படும்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

25—11—56 காலை 10 மணிக்கு சென்னை-இராயபுரம், அட்டபாளையம் பசனைக் கோவிலில் திரு. சி. முருகேசனார் தலைமையில் 'இலக்கியம் கற்பது பொழுதுபோக்கா?' என்ற விவாதம் நடைபெறும். திரு. ந. சண்முகம், ச. பொன்னுரங்கம், சோமு, பஞ்சாட்சரம் ஆகியோர் பேசுவர்.

சிறுவர் விளையாட்டு தினம்

25—11—56 மாலை 3 மணிக்கு: சென்னை-தூளை டிமலஸ் ரோடிலுள்ள கேசவப் பிள்ளை பூங்காவில் சிறுவர் விளையாட்டு தினம் திரு. எ. பி. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.